**கோறளைப்பற்று பிரதேச சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கோறளைப்பற்று பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கோறளைப்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 08 நூலகங்களுக்கு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 1,690,590 பெறுமதியான 4,871 புத்தகங்கள் மற்றும் விலை குறிப்பிடப்படாத 576 புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் நன்கொடைகள் இறுதிக் கணக்கறிக்கையில் சொத்தாக சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடைப் புத்தகங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 703,498 பெறுமதியான 185 வகையான 3,667 நுகர்வு பொருட்கள் மற்றும் ரூபா 339,430 பெறுமதியான 31 வகையான 471 மின்குமிழ் இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இருப்புக்களின் பெறுமதி கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வரையறுக்கப்பட்ட டயலோக் , மொபிடல் மற்றும் ஹட்ச் ஆகிய 03 தனியார் தொலைத் தொடர்பாடல் நிறுவனங்களிடமிருந்து 2010 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்ட வேண்டிய வியாபார உரிமைக் கட்டணமான ரூபா 420,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட்ட வேண்டிய வியாபார உரிமக் கட்டணத்தினை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2022 ஆம் ஆண்டுக்கான இருப்பு பொருட் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், 94 வகையான 360 பொருட்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்தும் அச் சொத்துக்களின் கிரயப் பெறுமதிகளிலிருந்து கழித்துக்காட்டப்படடிருக்கவில்லை. | ஏலவிற்பனை செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக அதன் கிரய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஏலவிற்பனை செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை அகற்றல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | 02 விடயங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளுக்கும் மற்றும் பதிவேடுகளிலுள்ள நேரொத்த மீதிகளுக்குமிடையே ரூபா 4,879,202 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டிருந்தது. | இது சீர்திருத்தம் செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கும் மற்றும் பதிவேடுகளிலுள்ள மீதிகளுக்குமி டையேயான வேறுபாட்டினை சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 25,548,271 பெறுமதியான 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பற்றிய பதிவுகள் பராமரிக்கப்பட்டு, குறைபாடுகள் சீர் செய்யப்படும். | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) பிரிவு | சபையினால் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற 740 வீதிகளை அடையாளப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் | வீதிகளின் அளவீடு மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்ததும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வீதிகளை அடையாளப்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) இல.371(2)(ஆ) | திண்மக்கழிவு நிலையம் தொடர்பில் வழங்கப்பட்ட ரூபா 3,344,907 முற்பணக் கொடுப்பனவுகளை 41 போர் அடையாளம் காணப்பட்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு 19 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) இல.571(1),(2) & (3) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,036,374 காலங்கடந்த 06 வகையான வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | காலங்கடந்த வைப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 45,931,332 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 60,660,398 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,700,000 | 1,043,235 | 1,043,235 | - | 1,790,000 | 873,150 | 873,150 | - |
| வாடகை | 11,924,000 | 30,350,442 | 9,013,814 | 21,336,628 | 11,934,000 | 8,230,835 | 7,620,649 | 18,399,540 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,739,000 | 6,169,256 | 6,169,256 | - | 3,764,000 | 6,203,421 | 6,202,421 | - |
| ஏனைய வருமானம் | 27,695,000 | 11,898,919 | 11,353,919 | 545,000 | 32,838,000 | 82,331,253 | 76,882,874 | 7,954,014 |
| | 45,058,000 | 49,461,852 | 27,580,224 | 21,881,628 | 50,326,000 | 97, 638,659 | 91,579, 094 | 26,353,554 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 1,826 ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம், 12 கிராம சேவையாளர் பிரிவுகள் அபிவிருத்தி அடைந்த கிராமங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தம் அப்பிரதேசங்களிலுள்ள ஆதனங்களை மதிப்பிட்டு வீதவரி அறவிடுவதற்கான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது வீத வரியறவீடு தொடர்பாக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளது. | சட்டத்தின் பிரகாரம் முறையான அனுமதியுடன் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| (i) | சபைக்குச் சொந்தமான கடைகளினை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் 58 வாடகைதாரர்களிடமிருந்த அறவிட வேண்டிய ரூபா 1,788,535 தொகையினை 02 வருடங்களிற்கு மேலாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வாடகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2013 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 55 குத்தகைத்தாரர்களிடம் அறவிடப்பட வேண்டிய குத்தகை நிலுவை வருமான ரூபா 20,019,479 தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சபையின் வாகனங்களை வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் அறவிட வேண்டிய வாடகை நிலுவையான ரூபா 1,317,150 தொகையினை 03 வருடங்களிற்கு மேலாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (iv) | சபைக்கு சொந்தமான மாட்டிறைச்சி கடை ஒன்றும் மற்றும் 20 கோழி இறைச்சிக் கடைகளினை வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | இறைச்சிக் கடைகளை வருடாந்தம் வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை காணப்பட்ட முற்பண வருமதியான ரூபா 509,634 தொகை முறையான அனுமதி மற்றும் சபைத் தீர்மானங்கள் இன்றி சபையினால் பதிவழிக்கப்பட்டிருந்தது. | குறைபாடுகளை சீர்செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | முற்பண வருமதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் நிலையான வைப்புகளுக்கு வணிக வங்கிகளினால் வழங்கப்படும் வட்டிச் சதவீதம் 20 அல்லது அதற்கு மேற்பட்டதாக காணப்பட்டிருந்தும் சபையினால் மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளில் பேணப்படும் ரூபா 4,497,520 நிலையான வைப்புகளினை அவ் வணிக வங்கிகளில் வைப்புச் செய்வதற்கு அல்லது புதிய வட்டி விதத்திற்கு அமைய நிலையான வைப்புகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் ரூபா 449,750 தொகையான வட்டி வருமான இழப்பொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது. | நிலையான வைப்பு தொடர்பாக மாறாத கூட்டு வட்டி அடிப்படையில் வைப்பு செய்யப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட வட்டிவீதமே வழங்கப்படுவதுடன் குறைபாடுகளை சீர்செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | புதிய வட்டி வீதத்திற்கு அமைய நிலையான வைப்புகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவிற்கமைவாக, இலங்கை உல்லாச பிரயாண சபையின் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி சபையினால் பதிவு செய்யப்பட்ட உணவுச்சாலை அல்லது உறையகம் என்பவற்றின் மொத்த வருமானத்தின் மீதான ஒரு சதவீதத்தினை விஞ்சாத உரிமத் தீர்வை | சுற்றுலா விடுதிகளின் உரிமைக்கட்டணங்கள் தொடர்பாக நாட்டில் கடந்தகாலங்களில் ஏற்பட்ட அசாதாரன சூழ்நிலைகள் காரணமாக அறவிட்டு கொள்வதில் காலதாமதங்கள் ஏற்பட்டது உண்மையென்பதுடன் | சட்டத்தின் பிரகாரம், சுற்றுலா விடுதிகளின் உரிமைக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டியிருந்தும் இதற்கு முரணாக 14 சுற்றுலாதுறைசார் நிறுவனம் மற்றும் சேவை வழங்குனரிடமிருந்து ரூபா 100,000 தொகை என்ற அடிப்படையில் நிலையானதொரு உரிமத் தீர்வையினை வருடாந்தம் சபை அறவிட்டுவருகின்றன. | தற்போது முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளது. | |
| (ஈ) | சபையினால் மேற்கொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களின் பிரகாரம், குத்தகைத் தொகையினை செலுத்தாத குத்தகைதாரர்களிடமிருந்து நிலுவைத் தொகையின் 10 சதவீத தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட குத்தகை நிலுவையான ரூபா 20,808,013 தொகையிலிருந்து எவ்வித தண்டப்பணங்களும் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபையினால் மேற்கொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களின் பிரகாரம், குத்தகைத் தொகையினை செலுத்தாத குத்தகைதாரர்களிடமிருந்து நிலுவைத் தொகையின் 10 சதவீத தண்டப்பணம் சேர்த்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவைக் குத்தகைகளின் மீதான தண்டப்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சபையினால் வருடாந்தம் சேகரிக்கப்படும் 398 மெட்ரிக் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள், 133 மெட்ரிக்தொன் பொலித்தீன் கழிவுகளை மீள்சுழற்சிக்கு பயன்படுத்துவதற்கும் அல்லது மாற்றுப்பயன்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கும் மற்றும் 423 மெட்ரிக்தொன் உக்கக்கூடிய கழிவுகளை சேதனப் பசளை உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி வருமானங்களை உழைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேதனப்பசளை நிலையத்தை விஸ்த்தரிப்பதற்கு கடந்த வருடம் பாதீடு செய்யப்பட்டபோதும் போதிய வருமானம் இன்மையால் நடைமுறைப்படுத்த முடியாமமல் போனது மேலும் இவ்வருடம் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | திண்மக் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி வருமானங்களை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபைக்கு கிடைக்கப்பெற்ற 328 கட்டிட விண்ணப்பங்களில் 156 மாத்திரமே சபையினால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய விண்ணப்பங்கள் மீள் சமர்ப்பிக்கப்படாமை, காணிப்பிரச்சினை, ஆவணக்குறைபாடுகள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தாமதம் போன்ற காரணங்களினால் அனுமதி வழங்கப்படாமல் காணப்பட்டிருந்தன. | குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கட்டிட விண்ணப்பங்களுக்கு காலதாமதமின்றி அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1915 இன் 15 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரிவு 15(1) இன் பிரகாரம், சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப கட்டிடமானது கட்டப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தி குடிபுகு இயைபுச் சான்றிதழ் (COC) வழங்கப்பட வேண்டியிருந்தும் | மேற்படி | சட்டத்தின் விதிமுறைகளுக் கேற்ப கட்டிடமானது கட்டப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தி குடிபுகு இயைபுச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 156 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 02 இற்காக மாத்திரமே குடிபுகு இயைபுச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அபிவிருத்தி உதவி செயற்திட்டம் மற்றும் சபையின் நிதி ஏற்பாடுகளின் மூலம் சபையின் வருமான நிலுவை அறவீட்டை அதிகரிக்கும் நோக்கில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,200,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இணையப்பொதி வடிவமைப்பினை நிறுவி அதனூடாக ரூபா 20,019,478 நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டிருந்தது. | சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,082,500 பெறுமதியான மல்டி சொப்பர் இயந்திரம் (Multi Shopper) மற்றும் சுழலும் வடிகட்டி இயந்திரங்களினை (Rotating Strainer) அத் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்க்கு மூன்று வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களை விரைவில் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கபடுகின்றது. | இயந்திரங்களினை திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வாகன திருத்தும் நிலையம் நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,793,646 பெறுமதியான 14 வகையான உபகரணங்கள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் என்பன பாவனையின்றி சபையின் களஞ்சிய அறையில் விளைவற்றுக் காணப்பட்டிருந்தன. | வாகன திருத்தும் நிலைய வேலைத்திட்டம் முடிவடைந்தவுடன் உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உள்ளூராட்சி அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் ரூபா 16,253,511 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 04 கொள்கலன் கடைகளை திட்ட முன்மொழிவின்படி உரிய 16 பயனாளிகளிற்கு வழங்கி வருமானங்களை உழைப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிக விரைவில் பயனாளிகளுக்கு இக் கடைத்தொகுதி வழங்கப்படும். | சொத்துக்களிலிருந்து வருமானங்களை உழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 01 தொடக்கம் 05 வருடங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படும் 06 வாகனங்கள், 10 இழுவைப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் பவுசர் என்பவற்றை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வருட PSDG திட்டத்திற்கு அமைவாக திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 10 வருடங்களாக பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டிருந்த உழவு இயந்திரத்தினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | திருத்த முடியாத நிலையிலுள்ள உழவு இயந்திரத்தினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பேத்தாழை மற்றும் கிரான் கலாச்சார மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 02 சிறுவர் பூங்காக்களில் காணப்படும் பழுதடைந்த நிலையில் உள்ள விளையாட்டு உபகரணங்களை திருத்தி சிறுவர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்கள் கருத்து நியாமானது என்பதுடன் விரைவில் சிறுவர் பூங்காக்களை திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சிறுவர் பூங்காக்களில் பழுதடைந்த விளையாட்டு உபகரணங்களை திருத்தி பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 16 வாகனங்கள் மற்றும் 13 இழுவைப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் பவுசர்களின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்கள் கருத்து நியாமானது, வாகனங்கள் தொடர்பாக உரிமைமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதிய கிழக்கு மாகாண சபையின் சுற்றிக்கை இல. PT/04(1)/2017 பந்தி இலக்க- 02 இன் பிரகாரம், பிரதேச பெறுகைக் குழுவிற்கான அனுமதியானது திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளமால் மீளாய்வாண்டில் ரூபா 20,666,057 பெறுமதியான 247 கொள்வனவுகள் மற்றும் சேவைகளுக்கான பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறைபாடுகளை சீர்செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம், பிரதேச பெறுகைக் குழுவிற்கான அனுமதியானது திணைக்களத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதியும் PT/04(1)/2017 ஆம் இலக்கமும் கொண்ட கிழக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 05 இன் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் (TEC) விடய அறிவுடன் தொடர்புடைய நபரொருவர் உள்வாங்கப்பட வேண்டியிருந்த போதிலும், இதற்கு முரணாக சபையினால் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 2,050,645 தொகைக்கு மின்சாதனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மேற்படி | மேற்படி |
| (இ) | 2021 ஆகஸ்ட் 08 ஆந் திகதியும் PT/04(6)/2021 ஆம் இலக்கமும் கொண்ட கிழக்கு மாகாண நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், ரூபா 500,000 வரைக்குமான பெறுகை நடைமுறைகள் மாத்திரமே பிரதேச பெறுகைக் குழு பரிந்துரைக்க முடியுமென அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் இச்சுற்றறிக்கைக்கு முரணாக இவ் எல்லையினை விஞ்சக்கூடிய வகையில் சபையினால் ரூபா 1,058,450 தொகைக்கு பெறுகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

**3.6 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில், மலசலகூடம் புனரமைத்தல், வீதிகளுக்கு பெயர் பலகையிடல் மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் முடிவுற்றதாக சபையினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதற்காக 2017 ஆம் ஆண்டில் கட்டுநிதிகள் பெறப்பட்டு வைப்புச் செய்யப்பட்ட தொகையில் ரூபா 750,000 பெறுமதியான வேலைத்திட்டங்கள் கணக்காய்வுத் திகதி வரைக்கும் நிறைவேற்றப்படாமல் காணப்பட்டிருந்தன. | 2016ம் ஆண்டுக்கான வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் முடிவடையாமல் உள்ள வேலைத்திட்டங்களை விரைவாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | மலசலகூடம் புனரமைத்தல், வீதிகளுக்கு பெயர் பலகையிடல் மற்றும் சிறுவர் பூங்கா அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்களை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆரம்பநிலைமட்டத்தில் 09 பதவி வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மட்டத்தில் 06 பதவி வெற்றிடங்களுமாக மொத்தமாக 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பலவீனமான முறையில் காணப்பட்டிருந்தன. | ஆளணி தொடர்பாக அதிக தேவைப்பாடுகளும் மற்றும் வெற்றிடங்கள் காணப்பட்டாலும் நாட்டின் பொருளாதார கொள்கைகளில் எதிர்காலத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆளணி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 10 வருடங்களில் இருந்து சபையினால் 19 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட அனர்த்தங்கள் மற்றும் ஏனைய கடன் உதவிய ரூபா 28,467 தொகையினையும், 06 வருடங்களிற்கு மேலாக கடந்த காலமாக பணியில் இருக்கும் போது மரணித்த ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடவேண்டிய கடன் நிலுவையான ரூபா 141,970 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4..1 சுற்றாடல் பிரச்சினை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 1988 இன் 56 ஆம் இலக்க சட்டம், 2008 இன் 01 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க 31 மர ஆலைகள், 04 அரிசி ஆலைகள் மற்றும் 01 கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையங்களின் காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு கடந்த 02 தொடக்கம் 07 வருட காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மேற்குறிப்படப்பட்ட சட்டப் பிரமாணங்கள் மற்றும் 2022 சனவரி 27 ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் ‘‘ஆ’’ பிரிவின் பிரகாரம், 05 வெதுப்பகங்கள் மற்றும் 05 அரைக்கும் ஆலைகள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |